(ஆ) விற்பனை வரி (மேல் வரி) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவு, 1989.

பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழி கிறேன்.

"1—7—1989 ஆம் நாளன்று ஆளுநர் அவர்கள் பிறப்பித் துள்ள 1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனைவரி (மேல்வரி) இரண்டாம் திருத்த அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 2/1989) இப்பேரவை நிராகரிக்கின்றது."

தீர்மானம் முறைப்படி வழிமொழியப்பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

(12-25)

"1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரி (மேல்வரி) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவு * (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 34/1989) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்".

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேராசிரியர் க. பொன்னு சாமி அவர்களின் தீர்மானமும், அமைச்சர் அவர்களின் தீர்மானமும் பேரவை முன் விவாதத்திற்கு வைக்கப்பெறுகின்றன.

பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே வைக்கப்பட்டு இருக்கின்ற சட்ட முன்வடிவிலே சென்னை நகர குடிநீர் சப்ளையை சீர்படுத்து வதற்காகவும், அதற்கான செலவினங்களை சரி செய்வதற்காகவும் விற்பனை வரியில் 5 சதவீதம் மேல் வரியாக விதிக்கப்படுகிறது என்று கொண்டு வந்து இங்கே வைக்கப்பட்டிருக்கிறது. குடிநீர் சப்ளை சரியாக இல்லை என்பது ஒத்துக்கொள்ளப்பட்டு இருப்பது கண்டு உள்ளபடியே நான் மகிழ்ச்சி அடைகிறேன். இந்த குடிநீர் சப்ளை சரியாக ஆக்கப்படுவதற்காக வரி விதிக்

* 31—10—1989 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசி தழில் வெளியிடப் பெற்றுள்ளது.

1989 நவம்பர் 1] [பேராசிரியர் க. பொன்னுசாமி]

கிறோம் என்று சொல்லி வரியை போட்டு விட்டீர்கள். ஆனால் இன்னமும் குடத்தோடு மக்கள் அலைந்து கொண்டு தான் இருக்கிறார்கள். பார்க்கிறோம். இதற்கு முன்னாள் இருந்த அரசு எவ்வளவு, சிரமங்களுக்கு இடையிலும் எங்கெங்கு இருந்தோ தண்ணீரை கொண்டு வந்து முழுமையாக தண்ணீர் சப்ளையை செய்து கொண்டு இருந்தார்கள் என்ற உண்மையை இந்த மாமன்றமும், இந்த மன்றத்தில் இருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர்களும் மறுக்க முடியாது என்பதை இங்கே நான் நினைவுப் படுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த நிதி 5 சதவீதம் என்பது சாதாரணமாக நமக்கு தோன்றினாலும் தண்ணீருக்காக அலைந்து கொண்டிருப்பவர்கள் தான் இந்த 5 சதவீத வரியையும் செலுத்துகிறார் என்பதை கருத்தில் கொண்டு அவர்களுக்கு தண்ணீர் கொடுப்பதற்கு அரசு முன் வரவேண்டுமே தவிர தண்ணீர் கொடுக்கப்படுவதற்காக வரி வாங்குகிறோம் என்று மீண்டும் சொல்லி தண்ணீர் தராமல் இருப்பதை தவிர்க்கவேண்டும் என்ற கொள்கையின் அடிப் படையில் இதை நான் எதிர்த்து அமைகிறேன். நன்றி.

திரு. கோ. பூவராகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வரி விதிப்பு குறிப்பாக சென்னை நகரத்திலே இருக்கின்ற மக்களுக்கு தண்ணீர் வசதியை பெருக்குவதற்காக இந்த வரி விதிப்பு செய்யப்பட்டு இருக்கிறது. குறிப்பாக இப்போது சென்னை மாநகராட்சியில் தண்ணீர் தட்டுப்பாட்டைப் போக்குவதற்கு இப்போது சென்னை நகரத்திற்கு மட்டும் ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கிறது. இதுபோல் மற்ற நகரத்திற்கும் விஸ்தரிப்பதற்கு ஏதாவது அரசின் யோசனை உண்டா என்று தெரியவில்லை. குறிப்பாக நம்முடைய பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களும், மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்களும் 2 முறை ஆந்திரா மாநிலத்திற்குச் சென்று தெலுங்கு கங்கை திட்டம் சம்பந்தமாக அதை விரைவு படுத்துவதற்கு, விரைவில் தண்ணீர் சென்னை நகரத்திற்கு வந்து சேருவதற்கு 2 முறை ஆந்திரா மாநிலம் சென்று அங்குள்ள அதிகாரிகளையும், அமைச்சர்களையும் பார்த்து வந்தார்கள். அதுபற்றிய ஒரு முழுமையான திட்டவட்டமான நிலையை எப்போது இந்த நகரத்திற்கு ஒரு நல்ல தண்ணீர், நிரந்தரமாக கிடைக்கும் என்பதை மக்கள் எதிர்பார்த்துக்கொண்டு இருக்

கிறார்கள். இந்த 5 சதவீத வரி மட்டும் அல்ல, இன்னும் கூட நீங்கள் அதிகமாக போட்டால் கூட நிரந்தரமாக நாள் முழுவதும் இந்த நகரத்தில் வாழ்கின்ற மக்களுக்கு தண்ணீர் பிரச்சினை தீர்வதற்கு ஒரு தனி வரி போட்டால் கூட ஏற்றுக்கொள்வதற்கு தயாராக இருக்கிறார்கள். இருந்தாலும் இந்த தண்ணீர் தட்டுப்பாட்டைப் போக்குவதற்கு நாம் எந்த அளவுக்கு முயற்சி எடுக்கிறோம் இந்த பணத்தை வைத்துக்கொண்டு இது போதுமா, போதாதா என்பதை எல்லாம் பற்றி புதிய அரசு பரிசீலனைச் செய்து வந்த உடனே அவர்களுக்கு செலுத்த வேண்டிய பணத்தையும் செலுத்தி மேற்கொண்டு செலுத்துவதற்கு தயாராக இருக்கிறோம் என்று சொல்லி விரைவுபடுத்துவதற்கு ஏற்பாடு செய்து கொண்டு இருக்கிறார்கள். இந்த 5 சதவீதம் பற்றி கவலைப்படாமல் மேலும் இந்த தண்ணீரை கொண்டு வந்து சேர்ப்பதற்கு முயற்சி எடுக்கவேண்டும் என்பது தான் என்னைப் போன்றவர்கள் கருதுவது. இந்த பெரு நகரத்தில் மட்டும் அல்லாது இதுபோன்று கோவை, திருச்சி, மதுரை போன்ற நகரத்திலும் கூட இந்த மாதிரி தண்ணீர் தட்டுப்பாடு இருக்கக் கூடாது என்பதற்காக ஒரு முழுமையான ஒரு சட்டம் அல்லது வரி போடுவதற்கு இந்த அரசு ஏற்பாடு செய்தால்கூட நல்லது. தண்ணீர் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் என்பதில் நான் முழுமையாக அவர்கள் கொண்டுவந்த இந்த வரி விதிப்புக்கு என்னுடைய ஆதரவை தெரிவித்துக்கொண்டு என்னுடைய வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

(12-30)

திரு. உ. ரா. வரதராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விற்பனை வரிக்கு கூடுதல் மேல் வரி விதிப்பதற்கான இந்தச் சட்ட முன்வடிவை இங்கே விவாதிக்கின்றபோது இதனுடைய நோக்க காரண விளக்க உரையிலே குறிப்பிட்டு இருப்பதை நான் சுட்டிக்காட்ட விழைகிறேன். சென்னை நகரிலே குடிநீர் வழங்குதலை அதிகரிக்கும் பொருட்டு கூடுதல் நிதி ஆதாரங்களை திரட்டும் வகையில் சென்னை மாநகராட்சியிலும் சென்னை மாநகராட்சியினுடைய வெளி எல்லையோரத்திலிருந்து 32 கிலோ மீட்டர் தூரத்திற்குள்ளாகவும் விற்பனை வரியின் மீது இந்த 100 க்கு 5 விழுக்காடு கூடுதல் வரி விதிப்பதற்காக இந்த சட்ட முன்வடிவு இங்கே கொண்டுவரப்பட்டிருக்கிறது. இது எப்படி குடிநீர் வழங்குதலை அதிகரிப்பதற்கு பயன்படுத்தப்படும்,

1989 நவம்பர் 1] [திரு. உ. ரா. வரதராசன்]

இந்த வரி எப்படி மாற்றப்படும் என்பதைப்பற்றிய விவரங்களை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்கள் என்று நான் நம்புகிறேன். சென்னை நகரத்திலேயும் சரி, புறநகர் பகுதிகளிலேயும் சரி குடிநீர் வழங்குவதிலே ஒரு மிகக் கடுமையான நெருக்கடி இப்போது ஏற்பட்டிருக்கிறது. குறிப்பாக, குடிசைபபகுதி களிலே குடிநீர் சப்ளை என்பது கடுமையாகப் பாதிக்கப்பட்டு மக்களெல்லாம் அல்லலுறுகின்றனர். அங்கே போதுமான தண்ணீர் டாங்குகள் இல்லாத நிலைமையும் இருந்து கொண்டி ருக்கின்றன. இதோடு இந்த மசோதாவிலே சென்னை நகரத்தி னுடைய குடிநீர் வசதியை அதிகரிப்பதற்காக சென்னை மாநக ராட்சியினுடைய மக்கள் மட்டுமல்ல. எல்லையிலேயிருந்து 32 கிலோ மீட்டர் சுற்றுப்புறத்திலேயுள்ள எல்லா மக்களும் இந்தக் கூடுதல் வரியைச் செலுத்தவேண்டுமென்று குறிப்பிடப்பட்டிருக் கிறது. ஆனால் அந்த 32 கிலோ மீட்டர் சுற்றுப்புறத்திலே வாழக்கூடிய புறநகர் பகுதி மக்களுக்கு குடிதண்ணீர் வசதி எப்படி செய்யப்படுகிறது என்பதையும் இங்கே நாம் ஆராய்ந்து பார்க்க வேண்டும். இந்த 32 கிலோ மீட்டர் சுற்றுப்புற பகுதி களிலே குடிநீர் ஆதாரம், அதாவது வாட்டர் சோர்ஸ் உண்டு. ஆனால் குடிநீர் வழங்குவதற்கான ஏற்பாடு என்பது இல்லை. இந்த மாநகராட்சியினுடைய மக்கள் மட்டுமல்ல, சுற்றுப்புற பகுதிகளிலே இருக்கக்கூடிய மக்களும் இந்த வரியை செலுத்த வேண்டுமென்று நினைக்கிறபோது 32 கிலோ மீட்டர் சுற்றுப் புறத்திலே இருக்கக்கூடிய அத்தனை மக்களுக்கும் புறநகர் மக்களுக்கும் குடிநீர் வழங்குகிற வசதியை மெட்ரோ வாட்டர் ஏற்குமா என்பதையும் நான் அறிய விரும்புகிறேன். ஏற்க வேண்டுமென்று, சில பகுதிகளுக்கு முடிவு செய்த பின்னரும்கூட அது மெட்ரோ வாட்டரிலே ஏற்கப்படாத நிலைமை என்னுடைய தொகுதியிலேயும் உண்டு ; மற்ற பகுதிகளிலேயும் உண்டு.

ஒருங்கிணைந்த குடிநீர்த் திட்டம் இந்தப் புறநகர் பகுதி களுக்கு அமைக்கப்படவேண்டுமென்றும் அதற்கான ஆய்வு நடத்தப்பட வேண்டுமென்றும் கோரிக்கைகள் பலமுறை விடுக்கப் பட்ட போதும்கூட குடிநீர் வடிகால் வாரியம் அந்த ஆய்வுகளை நடத்துகிற பொறுப்பைக்கூட ஏற்றுக்கொள்ளவில்லையென்பது
பட்டபோதும்கூட குடிநீர் வடிகால் வாரியம் அந்த ஆய்வுகளை நடத்துகிற பொறுப்பைக்கூட ஏற்றுக்கொள்ளவில்லையென்பது
பல ஆண்டுகளாகவே இருக்கிற நிலைமை. அதற்கு ஒரு

முற்றுப்புள்ளி வைக்கவேண்டும். சென்னை நகர மக்களுடைய பிரதிநிதியும் நான். என்னுடைய தொகுதி சென்னை நகரத்திலேயும் அடங்கி இருக்கிறது. ஆனால் என்னுடைய தொகுதி செங்கை-அண்ணா மாவட்டத்திலே அடங்கியிருக்கிற தொகுதி. சென்னை நகரத்திற்கு குடிநீர் சப்ளை செய்வது செங்கை-அண்ணா மாவட்டத்திலேயிருந்துதான். ஆனால் சென்னை மாநகரத்து மக்களுக்கு குடிநீர் வழங்குகின்ற அந்த செங்கை-அண்ணா மாவட்டத்திலே, குறிப்பாக சென்னையினுடைய புறநகர்ப் பகுதிகளிலேயிருக்கக் கூடிய மக்கள் குடிநீருக்காக ஆலாய் பறக்கிறார்கள் என்கின்ற நிலைமையையும் கவனத்திலே எடுத்துக்கொண்டு அவர்களுக்கு குடிநீர் வழங்குகின்ற ஏற்பாட்டை துரிதப்படுத்தவேண்டுமென்ற வேண்டுகோளையும் நான் விடுக்கிறேன்.

இன்னொரு பிரச்சினையையும் இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். குடிநீர் வழங்கப்படாமலேயே புதிய குடியிருப்புப் பகுதிகளுக்கு எல்லாம் கடந்த 10 ஆண்டுகளுக்கான குடிநீர் கட்டணம், வரி செலுத்தப்படவேண்டுமென்ற கோரிக்கை குடிநீர் வடிகால் வாரியத்தாலே வைக்கப்பட்டிருக்கிறது. மெட்ரோ வாட்டராலே வைக்கப்பட்டிருக்கிறது. அதுவும், அந்த 10 ஆண்டுகளுக்கான நிலுவையை ஒரேயடியாக செலுத்தினால் தான் அவர்களுக்கு குடிநீர் வழங்கப்படும், அங்கேயிருந்து கழிவு நீர் அகற்றுவதற்கான ஏற்பாடுகளும் அவர்களுக்குச் செய்து தரப்படும் என்கின்ற நிபந்தனைகளெல்லாம் விதிக்கப்படுகிறது. அதுமட்டுமல்லாமல் இங்கே பல குடியிருப்புகளிலே, பல மாடிக் கட்டிடங்களெல்லாம் இருந்துகொண்டிருக்கின்றன. வீட்டுவசதி வாரியம், குடிசைமாற்று வாரியம் என்று இருக்கின்றன. பல மாடிக் கட்டிடங்கள் இருக்கிற இடங்களிலே ஒரே சம்ப், நீர்த் தொட்டியின் மூலம் சப்ளை செய்தாலும்கூட ஒவ்வொரு அடுக்கு வீட்டிலே இருக்கிறவர்கள் அதற்காக, தனியாக கட்டணம் செலுத்தவேண்டுமென்கிற ஏற்பாடெல்லாம் இருக்கிறது. இவற்றையெல்லாம் களைந்து இந்தக் கூடுதல் வரியைப் பெற்று குடிநீர் வசதியை அதிகரிக்கிறபொழுது சென்னை மாநகராட்சியிலே மட்டுமல்லாமல் புறநகர்பகுதிகளிலேயும் குடிநீர் வழங்குகின்ற ஏற்பாடுகளை முறைப்படுத்துவதோடு இன்றைக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய மிகக் கடுமையான நெருக்கடியையும் தட்டுப்பாட்டையும் போக்குகிற வகையிலே அரசு செயல்படவேண்டுமென்று வலியுறுத்தி நான் அமைகிறேன்.

[1989 நவம்பர் 1]

* **திரு. மா. சுந்தரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 5 சதவீதம் விற்பனை வரியை உயர்த்தியிருக்கிறோம் என்று சொல்வது நிச்சயமாக விலைவாசியை ஏற்றும் என்கின்ற நிலைமையில் மாற்று கருத்து இருக்க முடியாது. விலைவாசி ஏறிவிட்டால் அதற்கு மத்திய அரசுதான் பொறுப்பு என்று சொல்வதும் தங்களுக்கு வசதியான முறையிலே, தமிழகத்தினுடைய. ஒரு மாநிலத்தினுடைய சில பிரச்சினைகளுக்காக வரியை ஏற்றி விடுவதும் நடந்துகொண்டிருக்கிற பிரச்சினை. 5 சதவீதம் டாக்ஸ் என்று சொன்னால் நிச்சயமாக நகரப் பகுதிகளிலே வாழ்கின்ற, சென்னை நகரத்திலே வாழ்கின்ற மக்களுக்குத் தேவையான எல்லா பொருட்களினுடைய விலையும் ஏறத்தான் செய்யும். விலை ஏறிவிட்டால், "பார், மத்திய அரசை" என்கிறார்கள். இது சென்டிரல் கவர்ன்மென்டினுடைய ராங் பாலிசி என்று பல்வேறு இடங்களிலே, பல அரசியல் கட்சிகள் பேசுவதை நான் கேட்டிருக்கிறேன். அதற்குப் பொறுப்பு நம்முடைய மாநில அரசுதான். பழியை ஏற்க தாங்கள் தயாராக இல்லை. தமிழகத்திற்கும், குறிப்பாக, சென்னை மாநகரத்திற்கு தண்ணீர் வசதி செய்து கொடுத்தாக வேண்டும்.

(12-35)

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா: தெலுங்கு கங்கைத் திட்டத்திற்கு மத்திய அரசு நிதி உதவினால் இந்தப் பிரச்சினையே வராது. எனவே தாங்கள் முயற்சி செய்து, தெலுங்கு கங்கைத் திட்டத்தை நிறைவேற்ற உதவினால் இந்த வரி போட வேண்டிய அவசியம் இருக்காது.

திரு. மா. சுந்தரதாஸ்: பணம் வாங்கவேண்டியதெல்லாம் மாநில அரசின் பொறுப்பு. எங்களுடைய பொறுப்பு அல்ல. ஆகவே நான் கேட்பது இப்போது குடிதண்ணீர் பிரச்சினையைப் பொறுத்தவரையில் நிச்சயமாக நம்முடைய சென்னை மாநகரம் கஷ்டப்படுகிறது. அதற்கு பட்ஜெட்டில் பணத்தை ஒதுக்கி பிரச்சினையைத் தீர்க்கவேண்டும். தமிழ்நாட்டிலும் சென்னை மாநகரத்திலும் விற்பனை வரியைப் போட்டு விலைவாசியை ஏற்றிவிட்டால் அது நிச்சயமாக அரசையும், பொதுமக்களையும் பாதிக்கத்தான் செய்யும். ஆகவே தண்ணீர் என்ற பெயரில் 5 சதவீதம் டாக்ஸ் போடுவது சரியானதாக இருக்காது, என்று சொல்லிக் கடமைப்பட்டிருக்கிறேன். ஒரு குறிப்பிட்ட பகுதி

மக்களின் தண்ணீர் வசதிக்காக தமிழ்நாட்டு மக்களிடமிருந்து டாக்ஸ் வசூலிப்பது நிச்சயமாக நன்றாக இருக்காது. இதற்கு ஒரு மாஸ்டர் பிளான் தயார் செய்து மக்களுடைய தண்ணீர் தேவையை பூர்த்தி செய்யவேண்டும். அதற்காக 5 சதவீத வரியைக் கூட்டி மக்களுக்கு வரிச்சுமையை ஏற்றுவது சரியான தாக இல்லை என்று சொல்லி, எம்.எல்.ஏ., ஹாஸ்டலிலும் தண்ணீர் இல்லை என்று சபாநாயகர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வந்து என் உரையை முடித்துக் கொள்கிறேன், வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: காலையில் குளிப்பதற்குத் தண்ணீர் இருந்ததா, இல்லை குளிக்காமலேயே வந்து விட்டீர் களா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா: பேரவைத் தலைவர் அவர்களே, அவையின் முன்னுள்ள தமிழ்நாடு விற்பனை வரி (மேல் வரி) திருத்தச் சட்டத்தின் மீது மாண்புமிகு உறுப் பினர்கள் தங்கள் கருத்துக்களை எடுத்துத் தெரிவித்திருக்கி றார்கள். தமிழ்நாடு சட்டம் 70/89 திருத்தச் சட்டமானது 1971-ம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரி (மேல் வரி) சட்ட மானது 1959-ம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச்சட்டத் தின்படி சிறப்புத் திட்ட வரியில் அனைத்து மாநகராட்சிகள் மற்றும் தனி நிலை நகராட்சிகளில் எல்லாம், பத்து சதவீதம் என்ற நிலையிலும் மற்ற பகுதிகளில் 8 சதவீதம் என்ற வகை யிலும் ஒற்றை மேல் வரியை 1989-ம் ஆண்டு ஏப்ரல் 1-ம் தேதி முதல் விதிப்பதற்கு வகை செய்கிறது. இதற்கிடையில், தெலுங்கு கங்கைத் திட்டத்தை அமலாக்குவதற்கு, 1989—90-ம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில்—ஏற்கெனவே இந்த அரசு அளித்த ரூ. 30 கோடி தவிர—மேலும் 30 கோடி ரூபாய் ஆந்திரப் பிரதேச அரசுக்குக் கொடுக்கவேண்டியதற்காகத் திரட்டும் பொருட்டும், அரசு விற்பனை வரி மீது கூடுதல் மிகை வரி விதிக்க லாம் என்பது விதியாகும். சென்னை நகரில் குடிநீர் வழங்குதலை அதிகரிக்கும் பொருட்டு கூடுதல் நிதி ஆதாரங்களைத் திரட்டும் வகையில் சென்னை மாநகராட்சியிலும் சென்னை மாநகராட்சி வெளி எல்லை ஓரத்திலிருந்து 32 கிலோ மீட்டர் தூரத்திற்கு உள்ளாகவும் விற்பனை வரியின் மீது 100 க்கு 5 சதவீதம் கூடுதல் மேல் வரி விதிப்பதென முடிவு செய்யப்பட்டுள்ளது. இதைச்

1989 நவம்பர் 1] [திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா]

செயல்படுத்துவதற்காக ஏற்கெனவே விற்பனை வரி, மேல் வரி 2 ஆம் திருத்த அவசரச் சட்டம் ஆளுநர் அவர்களால் பிறப்பிக்கப் பட்டிருக்கிறது. 1—7—1989-ந் தேதி முதல் இந்த சட்டம் வெளியிடப்பட்டது. வரி விதிப்பு 1—7—1989 முதல் அமலுக்கு வந்துள்ளது. நிதி ஆதாரத்தைத் திரட்டுவதற்குக் கொண்டு வரப்பட்ட சட்டமே தவிர புதிய வரி அல்ல.

மாண்புமிகு உறுப்பினர் பொன்னுசாமி அவர்கள் தண்ணீர் வரி என்று சொன்னார்கள். தண்ணீர் வரி அல்ல. குடிநீர்த் திட்டத்திற்கு நிதியாதாரங்களைத் திரட்ட வரியே தவிர தண்ணீர் வரி அல்ல. விற்பனை வரி மீது விதிக்கிற அடிஷனல் சர்சார்ஜ் தவிர தண்ணீர் வரி அல்ல என்பதை அவருக்கு நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

பேராசிரியர் க. பொன்னுசாமி : தண்ணீர் வரி என்று நான் குறிப்பிடவில்லை. தண்ணீர் வழங்குவதற்காக தேவைப்படுகின்ற நிதி ஆதாரத்திற்காகப் போடப்படுகின்ற மேல் வரி என்று தெளிவாக குறிப்பிட்டிருக்கிறேன் என்பதை அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(12-40)

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி. மிகத் தெளிவாக என்று அவர்கள் சொன்னதற்காக நான் பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. பூவராகன் அவர்கள் இது போன்ற திட்டத்தை கோவை, திருச்சி, மதுரை போன்ற நகரங்களுக்கும் விஸ்தரிக்கலாம் என்று ஆலோசனை சொல்லி இருக்கிறார்கள். அந்த ஆலோசனைப்படி தேவைப்பட்டால் விஸ்தரிக்கலாம் என்று நான் கருதுகிறேன். ஆனால் இப்போது இருக்கின்ற பிரச்சினை சென்னைமாநகரின் குடிநீர்ப்பிரச்சினையைப் போக்குவது குறித்தது. பல ஆண்டுக்காலமாக சென்னைமாநகரின் குடிநீர்ப்பிரச்சினையைப் போக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. ஏற்கெனவே நம்முடைய திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி இருந்த போதும் கூட வீராணம் திட்டத்தைக் கொண்டு வந்தோம். அரசியல் காரணத்தால் அது கைவிடப்பட்டது. ஏற்கெனவே இருந்த அரசு எடுத்துக்

கொண்ட முயற்சியின் காரணமாக தெலுங்கு கங்கைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டாலும் அந்தத் திட்டத்திற்கான நிதியுதவிகளைச் செய்யாத காரணத்தால் அந்தத் திட்டத்தை நிறைவேற்ற முடிய வில்லை. ஆனால் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் எடுத்துக் கொண்ட முயற்சியின் காரணமாக இந்தத் திட்டத்தை விரைவாக நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு அமைச்சர்கள் திரு. துரைமுருகன் அவர்களும், திரு. பொன்முடி அவர்களும் நேராகச் சென்று பார்த்திருக்கிறார்கள். வேலைகள் துரிதமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. எனவே இந்தச் சட்டமுன்வடிவின் மூலமாக தெலுங்கு-கங்கைத் திட்டம் நிறைவேறுவதற்கு நல்ல வாய்ப்பு அமையும் என்று கருதி இந்தச் சட்டமுன்வடிவை நிறைவேற்றித்தர வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. எஸ். டி. உகம்சந்த்: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது சொன்னார்கள். வீராணம் திட்டமானது முந்தைய அரசினுடைய அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக கைவிடப்பட்டது என்று சொன்னார்கள். மீண்டும் நீங்களே பொறுப்புக்கு வந்திருக்கிறீர்கள். ஏன் அந்தத் திட்டம் நிறைவேற்றப்படவில்லை. அதுமட்டுமல்ல; சமீபத்தில் பத்திரிகையில் வந்திருக்கிறது. சென்னைக்குக் குடிநீர் கொண்டுவருகிற கிருஷ்ணா நதி நீர்த் திட்டத்தில் சில இடர்ப்பாடுகள் ஏற்பட்டிருக்கின்றன. திரு. என். டி. ராமராவ் அரசினுடைய தவறான கொள்கையின் காரணமாக அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதில் காலதாமதம் ஏற்படும் என்று சொல்லியிருக்கிறார்களே. அதற்கு அரசின் மூலமாக என்ன பதில் என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா: பேரவைத் தலைவர் அவர்களே, தெலுங்கு-கங்கைத் திட்டம் தயாரிப்பதில் எந்தவிதமான இடர்பாடும் கிடையாது. சென்னை நகருக்குக் குடிநீர் நிச்சயமாக வரும். அத்திட்டத்திற்குக் கொடுக்க வேண்டிய பணத்தைக் கொடுத்துவிட்டால் இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டு சென்னை நகருக்குக் குடிநீர் கொண்டுவரப்படும். வீராணம் திட்டம் பற்றிச் சொன்னார்கள். அது 'டெக்னிக்கலி ஃபீஸிபிள்' என்று அன்றைக்கு அகர்வால் தலைமையிலே நியமிக்கப்பட்ட கமிட்டி கூறி இருக்கிறது. அதற்குப் பிறகு

1989 நவம்பர் 1] [திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா]

வந்த அரசு அதை நிறைவேற்றாத காரணம் குறித்தெல்லாம் நான் விவரிக்க விரும்பவில்லை. அரசியல் காரணங்களால்தான் அது நிறைவேற்றப்படவில்லை. அதை நிறைவேற்றியிருந்தால் இப்போது குடிநீர்ப் பிரச்சினைகூட தீர்ந்திருக்கும் என்று நான் கருதுகிறேன். இப்போது தெலுங்கு-கங்கைத் திட்டத்திற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. எனவே அது சிறப்பாக நடைபெறும் என்று நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, தண்ணீர் கொண்டுவருவதற்காகத்தான் இந்த மேல்வரி விதிப்பு என்று சட்ட அமைச்சர் அவர்களும் சொன்னார்கள்; இந்தச் சட்டமுன்வடிவும் தெரிவிக்கிறது. தெலுங்கு-கங்கைத் திட்டம் வரவேண்டும்; வரும் என்ற நம்பிக்கை நமக்கு இருக்கிறது. இருந்தாலும் இப்போது போதுமான தண்ணீர் இல்லாத காரணத்தாலே 30, 40 கிலோ மீட்டர் பக்கத்திலே இருக்கின்ற புலிக்கட்டேரியிலிருந்து—சுவர்ணமுகி, ஆரணி மற்றும் ஒரு நதி ஆக மூன்று நதிகள் அதிலே கலக்கின்றன—மீனவர்கள் பாதிக்கப்படாத வகையில் தண்ணீர் கொண்டு வருகிற திட்டத்தை நிறைவேற்ற முடியும். அதைப்போலே ஓகையன் மதகு என்று திருவான்மியூருக்கு அடுத்தபடியாக இருக்கிறது. அந்த மதகைச் சீர்படுத்தினால் தண்ணீர் கொண்டுவர முடியும். அந்தத் தண்ணீரைக் கொண்டுவருவதற்கு, வீராணம் ஏரித்திட்டத்திற்காகத் தயார் செய்த குழாய்களே போதுமானது என்று மூர்த்தி என்று சொல்கிற அந்தத் துறையிலே உள்ள ஒருவர் 6, 7 ஆண்டுகளுக்கு முன்பே ஒரு திட்டத்தைத் தந்தார். நான் அதை முன்பிருந்த அரசிடம் கொடுத்தேன். இப்போதிருக்கிற அரசிடமும் பணிவோடு நான் கேட்டுக்கொள்கிறேன். 8 கோடி ரூபாய் முதல் 10 கோடி ரூபாய் வரையில் செலவிட்டால் நிறைய தண்ணீர் கிடைக்கின்ற வாய்ப்பு இருக்கிற காரணத்தாலே ஓகையன் மதகு திட்டத்தையும், மீனவர்கள் பாதிக்கப்படாத வண்ணம் புலிக்கட்டேரி திட்டத்தையும் நிறைவேற்றுவது குறித்து பரிசீலிக்கப்படுமா என்பதையும் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு அதாவது இந்தப் பணம் வருகிற காரணத்தால்—10 கோடி ரூபாய் செலவிட்டால் தண்ணீர் கிடைக்கும், எவ்வளவு தண்ணீர் கிடைத்தாலும் தண்ணீர் தேவை இருக்கின்ற காரணத்தால்—இதைப் பயன்படுத்திக்கொண்டு அந்தத் திட்டங்களை நிறைவேற்றவேண்டுமென்று உங்கள் முன்னால் சமர்ப்பித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையின் முன்னால் இருக்கின்ற பிரச்சினை தெலுங்கு-கங்கைத் திட்டம் பற்றியது. ஆனால் திரு. குமரி அனந்தன் அவர்கள் வேறு சில திட்டங்கள் பற்றிச் சொல்கிறார்கள். அந்த விவரம் என்னிடத்திலே இல்லை. எனவே நான் விளக்க முடியாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

பேராசிரியர் க. பொன்னுசாமி அவர்களின் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

"1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரி (மேல் வரி) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 34/1989) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற்றது.

பிரிவு 2 முதல் 4 வரை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

(12-45)

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரி (மேல்வரி) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 34/1989) நிறைவேற்றப்பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.